செ.வெ.எண்.02 நாள்.03.07.2017.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 67 பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் மூலம் நலத்திட்ட உதவிகளையும், மூன்று நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினையும் வழங்கினார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.07.2017) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் வன்கொடுமையால் பாரிக்கப்பட்ட தீருதவித் தொகை ஒரு பயனாளிக்கு ரூ.3.75 இலட்சத்திற்கான காசோலையினையும், 10 பயனாளிகளுக்கு தலா ரூ.1.50 இலட்சத்திற்கான காசோலைகளையும், மூன்று பயனாளிகளுக்கு தலா ரூ.22500/–க்கான காசோலைகளையும், ஒரு பயனாளிக்கு ரூ.75 ஆயிரத்திற்கான காசோலையினையும், ஒரு பயனாளிக்கு ரூ.50 ஆயிரத்திற்கான காசோலையினையும், ஒரு பயனாளிக்கு ரூ.15 ஆயிரத்திற்கான காசோலையினையும், மாவட்ட தாட்கோ மூலம் இளைஞர் சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு, பயனாளி பங்களிப்புடன், அரசு மான்யத்துடன் ரூ.4,90,485/– மதிப்பில் சரக்கு வாகனத்தினையும், தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு, பயனாளி பங்களிப்புடன், அரசு மான்யத்துடன் ரூ.6,15,900/– மதிப்பில் சரக்கு வாகனத்தினையும், ஒரு பயனாளிக்கு, பயனாளி பங்களிப்புடன் அரசு மான்யத்துடன் ரூ.4,65,485/– மதிப்பில் டாடா ஏசி வாகனத்தினையும், வருவாய்த் துறையின் மூலம் பாளையங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த 8 பயனாளிகளுக்கு தலா ரூ.3236/– மதிப்பில் 0.80 ச.மீ. பரப்பளவில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், கடையநல்லூர் வட்டத்தைச் சார்ந்த ஒரு பயனாளிக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவினையும், சங்கரன்கோவில் வட்டத்தைச் சார்ந்த ஒரு பயனாளிக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான ஆணையினையும், மாவட்ட வழங்கல் துறையின் மூலம் திருநெல்வேலி வட்டத்தைச் சார்ந்த 11 பயனாளிகளுக்கு ஸ்மார்ட் கார்டுகளையும், மானூர் வட்டத்தைச் சார்ந்த 15 பயனாளிகளுக்கு ஸ்மார்ட் கார்டுகளையும், பாளையங்கோட்டை வட்டத்தைச் சார்ந்த 10 பயனாளிகளுக்கு ஸ்மார்ட் கார்டுகளையும், பேரூராட்சித் துறையின் மூலம் கருணை அடிப்படையில் இரண்டு நபர்களுக்கு இளநிலை உதவியாளராக பணிபுரிவதற்கான ஆணைகளையும், ஒரு நபருக்கு பதிவறை எழுத்தராக பணிபுரிவதற்கான ஆணையினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

முன்னதாக, மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, பட்டா மாறுதல், குடிநீர், சாலை வசதிகள் உள்பட பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பெற்று, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி, விரைவில் பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் ஆட்சித்தலைவர் அவர்கள் மூலம் பெறப்பட்டு நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். விண்ணப்பதாரர்களுக்கு உடனுக்குடன் பதில் அனுப்ப வேண்டும் என உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.நிர்மலா, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, தாட்கோ மாவட்ட மேலாளர் திருமதி.மாரிமுத்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.சத்தியநாராயணன், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.மாஹின் அபுபக்கர் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.